www.tamilarangam.net

தந்துதவியவர்: தேசம்நெற்

The EelaBhoomi

அன்பளிப்பு U.K. 40p

Germany: 2.00DM, France: 5FF, Swiss: 2SF, Canada: 1.25Ca$

# ஈழபூமி

The Weekly Tamil Newspaper in Europe


ஈழபூமி தொடர்பான உங்களது ஆக்கபூர்வமான விமர்சனங்களை கோருகின்றோம். வாசகர் தோரணம் என்ற பகுதியில் இந்த விமர்சனங்கள் பிரசுரிக்கப்படும் என்பதை உங்களுக்கு அறியத்தருகிறோம்.

### தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் உத்தரவை அடுத்து

# கருணாநிதி கைது?

(இந்திய நிருபர் எம்.ஞானசேகர்)

**கருணாநிதி கைது செய்யப்பட்டுவிட்டார் என்ற செய்தி தமிழ்நாட்டையே உலுக்கி யுள்ளது.**



முன்னாள் தமிழக முதலமைச்சரும் திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் தலைவருமாகிய கலைஞர் கருணாநிதியை தமிழ் நாட்டு பொலீசார் கைது செய்துள்ளனர் என்ற செய்தியில் எதுவித உண்மையுமில்லை என்று அறிவிக்கின்றார் இந்திய நாளேடான தினத்தூது பத்திரிகையின் இணை ஆசிரியர்.

கருணாநிதி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகியுள்ளார் என்று இன்று கிடைத்த செய்தியை ஊர்சிதம் செய்யும் பொருட்டு தினத்தூது பத்திரிகை நிறுவனத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியபோது, இந்திய ஈழ பூமி நிருபரும், தினத்தூது பத்திரிகையின் இணை ஆசிரியர்களில் ஒருவருமான திரு எம். ஞானசேகர் எமக்கு தெரிவித்தபோது கருணாநிதி கைதாகிவிட்டார் என்ற செய்தி இந்தியாவில் பரவியபோதும் இந்தச் செய்தியில் எந்த வித உண்மையும் இல்லை என்று கூறினார்.

இவர் மேலும் கூறுகையில், கருணாநிதியை கைதுசெய்யும் சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் அப்படி கைது செய்வதென்றாலும் மதுரையில் நடக்கவிருக்கும் தி.மு.க வின் மகாநாட்டிற்கு பின்னரே அவர் கைது செய்யப்

தொடர்ச்சி 9ம் பக்கம்



அல்லலுறும் எம்மவர்க்கு அமைதி கொடு என்று ஈழபூமி பிரார்த்திக்கிறது

## அகதிகள் நாடு திரும்புவர்

தமிழீழத்திலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாய்ச் சென்ற ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பேரில் 20000 பேர் நாடு திரும்ப உள்ளதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. செல்வி ஜெயலலிதாவின் கெடுபிடிகளைத் தாங்க முடியாமல் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்திருக்கும் இவர்கள் வருகின்ற தை மாதம் 16ம் திகதியளவில் நாடு திரும்பலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## காணாமல் போன சுமதியின் நிலை என்ன

(எம்.எஸ்.சலீம்)

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து கொழும்பு புறப்பட்ட வேளையில் பொலநறுவை என்னும் இடத்தில் வைத்து கடத்திச் செல்லப்பட்ட ஐயாக் குட்டி சுமதி என்ற யுவதி தொடர்பாக பல முரண்பாடான செய்திகள் வெளியாகியுள்ளன. இவர் காணாமல் போன சமயம் அரசினால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில், இந்த யுவதி புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டதாக விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் விடுதலைப் புலிகள் இவரைக் கடத்திச் செல்லவில்லை என்றும் இவர் பொலநறுவை பொலீசாரினால் கைது செய்யப்பட்டதற்கு ஆதாரங்கள் உள்ளதாகவும் அப்பகுதி பொது நல ஸ்தாபனம் ஒன்று கூறியுள்ளது. இவர் பொலீசாரினால் கைது செய்யப்பட்டது உண்மையாயின், இவரை புலிகள் கடத்திச் சென்றனர் என்று அரசு அறிவித்ததன் காரணம் என்ன? இவருக்கு என்ன நடந்தது என்று அரசு உடனடியாக அறிவிக்கவேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கேட்டுள்ளது.

## யுத்த நிறுத்தம்!

வருகின்ற நத்தார் புது வருடத்தை முன்னிட்டு வடகிழக்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கும் முயற்சியில் முன்னேற்றம் காணப்படுவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. கடந்த வருடமும் இந்த யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப் பட்டதாகக் கூறும் அரச தரப்பு பேச்சாளர் ஒருவர், விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து ஒரு நல்ல முடிவு கிடைக்கும் என்று தான் எதிர்பார்ப்பதாக் கூறியுள்ளார். இதுவரையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வரவில்லை ஆயினும், இரு தரப்பிலும் இதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## பிரச்சனைபற்றி ஆராய புதிய குழு

(எம்.எஸ்.சலீம்)

தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காணும் பொருட்டும், தற்காலிகமாக ஒரு யுத்த நிறுத்தத்தை அமுலுக்குக்குக் கொண்டு வருதற் பொருட்டும் பல தரப்பட்ட விடயங்களையும் ஆராய்ந்து ஒரு அறிக்கையை சமர்ப்பிக்கும் பொறுப்பைக் ஒரு புதிய குழுவிடம் கையளித்துள்ளார் விடுதலைப்புலிகளின் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன். மதிவுரைக் குழு என்று அழைக்கப்படும் இந்

தொடர்ச்சி 9ம் பக்கம்

## கிழக்கில் பலத்த மழை

கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையின் காரணமாக பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. அம்பாறைப் பகுதிகளில் வெள்ளம் மூன்று அடி வரை உள்ளதாகவும் பல இடங்களில்

தொடர்ச்சி 9ம் பக்கம்

அனைத்து செய்திகளையும் தாங்கிவரும் தனித்துவமான பத்திரிகையே ஈழபூமி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு நாட்டையே ஆட்டிப்படைக்கும் மனித கொல்லி எய்ட்ஸ்

கடந்தவாரம் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றின் பிரகாரம் லட்சக்கணக்கான தாய்லாந்து மக்கள் எயிட்ஸ் நோயினால் இறக்கும் நிலையைய அடைய உள்ளார்கள். இங்கிருக்கும் மக்கள் தங்கள் பாலியல் புணர்ச்சி முறைகளை மாற்றினால் ஒழிய இந்த அபாயத்தை தடுத்து நிறுத்த முடியாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. இதற்கான முன் மாதிரி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த நாட்டின் மொத்த வருமானத்தில் இருபது வீதம் அதாவது பத்து மில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் வரை செலவாகும் என்று கணித்துள்ளனர்.

அமைச்சரவையில் உள்ள மந்திரி மேச்சை விரவைத்யா (எல்லோராலும் ஆணுறை மன்னன் என்று அழைக்கப்படுபவர்) பத்திரிகையாளர்கள் மாநாடொன்றில் பேசுகையில், சுமார் 200,000 தொடக்கம் 400,000 பேர் வரை ஏற்கனவே இந்த வியாதி உடையவர்கள் என்று கூறினார். 56 மில்லியன் சனத்தொகையைக் கொண்டிருக்கும் இந்த நாட்டில் அடுத்த பத்து வருடங்களில் சுமார் நான்கு மில்லியன் பேர் எயிட்ஸ் நோயின் பாதிப்பைப் பெற்றுவிடுவார்கள் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

700 பேர் ஒவ்வொரு நாளும் இந்த வியாதியின் பிடியில் சிக்கிக்கொள்கிறார்கள் என்கிறார் அமைச்சர் மேச்சை. இதனை அடுத்து தாய்லாந்து அரசு 60 மில்லியன் பவுண்களை எயிட்ஸ் பற்றிய பிரச்சாரத்திற்காக ஒதுக்கியுள்ளது.

தாய்லாந்தில் விபச்சாரம் ஒரு அனுமதிக்கப்பட்ட கைத்தொழிலாகும். 16 வயது நிரம்பிய 90 சதவீதமான ஆண்கள் ஒரு விபச்சாரியுடனாவது உடலுறவு கொண்டுள்ளார்கள்.

இந்த நோய் பரவுவதைத் தடுப்பதற்கு தாய்லாந்து அரசு உலக நாடுகளின் உதவியை எதிர்பார்த்துநிற்கிறது.



வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் சமூக சேவையாளர் எய்ட்ஸ் பற்றி விபரிக்கிறார்.

## இலங்கை இந்திய உறவு மீளாய்வு

(நமது நிருபர்)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள உறவு தொடர்பாக கலந்தாலோசிக்கும் பொருட்டு இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவும் நாளை பிரேமதாஸவின் இல்லத்தில் சந்திக்கவுள்ளனர். அண்மைக்காலங்களில் இலங்கை இந்திய உறவில் விரிசல் ஏற்பட்டபோதும் இந்த விரிசலை நீக்கி இரு நாடுகளும் மீண்டும் உறவைப் பலப்படுத்திக் கொள்ளும் பொருட்டு நடக்கவிருக்கும் இந்தச் சந்திப்பில் பல பிரச்சனைகள் தமிழர்கள் பிரச்சனை தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாக ஊர்சிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக தொலைபெசி மூலம் தொடர்பு கொண்டு எமது கொழும்பு நிருபர் ஆனந்தசங்கரிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது, நடக்கவிருக்கும் சந்திப்பு பிரதானமாக அண்மைக்காலங்களில் இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட விரிசலைப் போக்கிக் கொள்ளவே என்றாலும் தமிழ் மக்களின் பிரச்சனை தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின் போது கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றி இடைநிறுத்தப்பட்ட சார்க் மாநாடு நாளை மீண்டும் இலங்கையில் நடைபெற உள்ளதாலும், நாளைமறுதினம் நடக்கவிருக்கும் சார்க் நாடுகளின் விளையாட்டுப் போட்டியை முன்னிட்டும் கொழும்பு நகரம் எங்கணும் பலத்த இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டுள்ளதாகக் கூறினார்.

வாகனப் போக்குவரத்துக்களை பல பிரதான வழிகள் மூலம் மேற் கொள்ளத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. உசார் நிலையில் நிற்கும் பொலீசாரும், இராணுவத்தினரும் மாநாட்டைக் குழப்ப ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அதனை உடனே முறியடிக்கும் நோக்கோடு காவல் புரிகின்றனர் என்று கூறப்படுகிறது. நாளை நடக்கவிருக்கும் இரு நாடுகளின் தலைவர்கள், சந்திப்பின் போது ஆராயப்படவுள்ள விடயங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை.

சார்க் அமைப்பில் பங்குபற்றும் ஏழு நாடுகளுடையதும் பிரதிநிதிகள் ஏற்கனவே இலங்கை வந்து சேர்ந்துவிட்டாலும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் நாளையே தமது பயணத்தை மேற்கொள்கிறார். இந்த சந்திப்பின்போது இலங்கையினதும் இந்தியாவினதும் உறவை மேலும் எவ்வாறு வலுவடையச் செய்யலாம் என்பது பற்றியும் ஆராயப்படவுள்ளது. இது இவ்விதமிருக்க பிந்திக்கிடைத்த ஒரு தகவலின்படி இந்தியப்பிரதமர் ஈழத்தமிழர்களின் பிரச்சனைக்கு தீர்வுகாணும் பொருட்டு புதிய யோசனைகளை பிரேமதாசாவிடம் கையளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னிந்தியாவில் ஈழத் தமிழர்கள் தனக்கு பெருந்தலையிடியாக இருந்து வருகிறார்கள் என்ற ஜெயலலிதாவின் புகாரை அடுத்து ஈழத்தமிழர்கள் பிரச்சனையில் ஒரு சுமூகமான முடிவைக் கொண்டுவர இந்தியா முயற்சிப்பதாக பிரதமர் நரசிம்மராவ் அறிவித்திருந்தது தெரிந்ததே. இந்த இரு நாடுகளினதும் தலைவர்கள் கலந்துரையாடும் பொழுது இந்தியாவின் யோசனையான திருகோணமலையில் ஈழஅகதிகளுக்கு ஒரு மத்திய முகாம் அமைப்பது தொடர்பான எண்ணத்தை விரிவாக ஆராயலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.


T.K.Video & Blues Sports Club

PRESENT

இலண்டன் வாழ் தமிழ் சினிமா ரசிகப்பெருமக்களுக்கு T.K Video வினதும் Blues விளையாட்டுக் கழகத்தினதும் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.

T.K.Video வின் ஆதரவுடன் Blues விளையாட்டுக் கழக நிதிக்காக மீண்டும் வீறு நடை போட வருகிறான் உங்கள் தளபதி

இசை இளையராஜா

தளபதி




டைரக்ஷன் மணிரத்தினம்

At Odeon Wimbledon
On 24th December 1991 At 6.30p.m.
Doors Open at 6.00p.m.

18 வயதுக்கு மேற்பட்டோர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்

உங்கள் தளபதி ரஜனிகாந்த், மெகா ஸ்டார் மம்முட்டி, நாட்டியத் தாரகை ஷோபனா, நவரச நாயகி பானுப்பிரியா, நகைச்சுவை திலகம் நாகேஷ், ஜெய்சங்கர், கீதா மற்றும் பலர் நடித்த வெற்றிப்படைப்புத்தான் தளபதி

T.K.Enterprises
110A Merton High Street
Wimbledon, London SW19

For further details: Vanee Agency 081-471 8366
T.K.Video 081-672 2676

நுழைவுக் கட்டணம் £5.00

www.tamilarangam.net



The Eela Bhoomi

ஈழபூமி

The Weekly Tamil Newspaper in Europe

ஆண்டு 1 வாரம் 4 09-12-91 திங்கட்கிழமை

## ஈழபூமியின் ஏட்டில் இருந்து....

## ஐரோப்பிய பொருளாதார கூட்டமைப்பில் அகதிகள் நிலை

**1992**-ஆம் ஆண்டை அண்மிப்பதற்கு இன்னும் சில வாரகாலங்களே உள்ளன. **1992**-ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமல்ல, இந்த நாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கும் இலட்சக்கணக்கான அகதிகளுக்கும் ஒரு முக்கியமான ஆண்டு. சுமார் **400** மில்லியன் சனத்தொகையை கொண்ட உலகின் மிகப் பெரிய பொருளாதார கூட்டமைப்பு வருகின்ற வருடம் அமுலுக்கு வருகின்றது. இக் கூட்டமைப்பிலே பங்குகொள்ளும் முழு நாடுகளுமே 'அபிவிருத்தி அடைந்த நாடுகள்' என்ற வரிசையில் உள்ள நாடுகள்.

அமெரிக்காவின் உற்பத்தி பெருக்கும், ஜப்பானின் தொழில் நுட்ப வளர்ச்சியும் ஐரோப்பிய பொருளாதாரத்தில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தியது தெரிந்ததே. ஐரோப்பிய நாடுகளின் வெளிநாட்டு கடனில் அரை வாசிக்கு மேல் அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்குமே சொந்தமாக இருந்தன. அமெரிக்காவினதும் ஜப்பானினதும் பொருளாதார ஆக்கிரமிப்பை நிறுத்தும் பொருட்டும், ஐரோப்பிய நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஒரு பாரிய சந்தையை அமைத்துக் கொடுத்தற் பொருட்டும் கொணரப்படும் இந்தக் கூட்டமைப்பு, ஐரோப்பிய நாடுகளுக்கு நன்மையை கொண்டுவரும் அதேவேளை, இலட்சக் கணக்கான அகதிகளுக்கு பாதகத்தையும் கொண்டுவருகிறது.

இந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் எந்த ஒரு நாட்டினது பிரஜையும் வேறு எந்த (இக் கூட்டமைப்பு நாடுகள்) ஒரு நாட்டிலாவது தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளவோ அன்றி சுய தொழிலை ஆரம்பிக்கவோ முடியும். பிரயாண கட்டுப்பாடுகள் எதுவும் இருக்காது. எனினும் இந்த சலுகைகள் அகதிகளாய் வாழும் மக்களுக்கு கிடைக்கமாட்டாது. இவர்கள் விடயத்தில் கடுமையான போக்கை கடைப்பிடிக்கப் போகும் இக்கூட்டமைப்பு இனிவரும் காலங்களில் இது போன்ற அகதிகள் வருகையை கட்டுப்படுத்துவதற்காக குடிவரவுச் சட்டங்களில் என்றுமில்லாதவாறு மாற்றங்களைச் செய்துள்ளது. அமைதியும் ஆதரவும் தேடிவரும் ஆயிரக் கணக்கான மக்கள் மீண்டும் அச்சமும் அச்சுறுத்தலும் நிலைகொள்ளும் அவர்களது சொந்த நாடுகளுக்கே திருப்பி அனுப்பப்படும் நிலை உருவாக இன்னும் சில நாட்களே பாக்கி இருக்கிறது. **400** மில்லியன் மக்களுக்கு நன்மையை கொண்டுவரும் இந்த "ஐரோப்பிய சமூகம்" நாலு பேருக்கு கதவை மூடுவதில் ஏன் இவ்வளவு அக்கறை காட்டுகின்றது?

EDITOR
The Eelabhoomi
164A (Rear) Mitcham Road
London SW17
Tel: 081-767 8895

# மரணத்தைக் காவும் மனிதர்கள்

எஸ்.இராசையா




உலகில் இன்று பெருந்தொகையான மக்களின் கவனத்தை ஈர்ந்திருக்கும் பரிகாரம் தேட முடியாத ஒரு வியாதிதான் எய்ட்ஸ். கடவுள் இருக்கிறார் என்பதற்கு காரணமான மரணமானது-அதாவது ஒரு மனிதனின் மரணம் எப்போது நிகழும் என்பது அவனுக்குத் தெரியாதென்பதும் அதனை நிர்ணயிக்கும் ஆண்டவனுக்கு மட்டுமே தெரியும் என்பதே ஆண்டன் ஒருவன் இருக்கின்றான் என்று மனிதனை உணரவைத்தது. ஆனால் அண்மையில் வைத்திய நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் எய்ட்ஸ் என்கின்ற இந்த வியாதி அந்த மனிதன் எந்தத் திகதியில் இறப்பான் என்பதை அறிய முடியாவிட்டாலும் எத்தனை வருடங்களில் இறந்து விடுவான் என்பதை உணர்த்துகின்ற காரணியாகி விட்டது. உலகின் பல நாடுகளில் பல்லாயிரக்கணக்காண மக்களை மரணத்தின் விளிம்பிற்கு எடுத்துச் செல்லத் தயாராக இருக்கும் இந்த நோய் எப்படிப் பரவுகிறது, இதனுடைய தோற்றம், வளர்ச்சி, எந்த முறையில் மனித உடலில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பது பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**Acquired Immuno Deficiency Syndrome** என்ற விரிவாக்கத்தை கொண்டிருக்கும் எய்ட்ஸ் என்கின்ற இந்த வியாதி ஒரு வகை வைரஸ் கிருமியினால் தோற்றம் பெறுகிறது. **Human Immunodeficiency Virus (HIV)** அதாவது மனித உடலின் கிருமி எதிர்ப்புக் கலங்களை அழித்து முன்னேறுகின்ற ஒரு வகை வைரஸ் கிருமியே இந்த எய்ட்ஸ் நோய்க்குரிய முக்கிய காரணி என அடையாளம் காணப்பட்டுள்ளது. **1983**-ஆம் ஆண்டு பிற்பகுதியில் இவ் வைரஸானது, லூக் மொண்டேஜினராலும் றொபேர்ட் ஹலோ என்பவராலும் கண்டுபிடிக்கப்பட்டு, இரண்டு வருட காலப்பகுதிக்குள் இந்நோய் தொடர்பான கூடுதலான தகவல்கள் உலகத்துக்கு வெளிக் கொணரப்பட்டது. இவ் வைரஸானது, றெட்ரோ வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்தது.

இது குருதியில் கலந்து மனித உடற்கலங்களை சென்றடைகின்றது. இவ்வாறு சென்றடையும் இக்கிருமிகள் மனித எதிர்ப்புச் சக்தியுடன் போராட்டம் நடத்துகின்றன. இவ்வாறு நடக்கும் போராட்டத்தில் மனித நோய் எதிர்ப்புக் கலங்கள் தோல்வி காணவே, இவ்வகை வைரஸ்கள் தங்களது இராச்சியத்தை மனித உடற்கலங்களில் ஸ்தாபிக்கின்றன. இதற்கு தொற்று ஏற்பட்ட காலத்தில் இருந்து இதனுடைய அறிகுறி தென்படும் காலம் வருவதற்கு சுமார் ஆறில் இருந்து எட்டுவருடங்கள் வரை செல்லலாம். இருந்தாலும் மனித நோய் எதிர்ப்புச் சக்தியைப் பொறுத்து இது சில வேளைகளில் இரண்டு வருடங்களில் கூட மனிதனைக் கொல்லும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துவிடும்.

இந்தக் கிருமிகள் உடலில் புகுந்தவுடன் அதற்கான அறிகுறிகளை நோயாளி உடனடியாக உணர்ந்து கொள்ளமாட்டார். இது வளர்ச்சி அடைய சில காலம் எடுப்பதால் அந்தக் கால இடைவெளியில் இக்கிருமியினால் ஏற்படும் பாதிப்பை இந்நோயாளி கண்டு கொள்வது கடினம். ஆனால் இதனுடைய முதிர் பருவம் ஏற்படுகின்ற பட்சத்தில் ஒருவித சோர்வு, தூக்ககுணம் போன்ற அறிகுறிகள் தென்படுவதோடு, சிலவேளைகளில் உடலின் வெளிப்பாகங்களில், அதாவது தோலில் கொப்பளங்கள் போன்ற கல அழிவு ஏற்பட ஆரம்பிக்கும். ஆரம்பகாலத்தில் எய்ட்ஸினுடைய பாதிப்பு அந்த நோயாளிக்கு தெரியாதிருக்கின்ற காரணத்தினாலும் உடனடியாக அந்நோயாளியை மரணத்திற்கு இட்டுச் செல்லாது என்பதனாலும் எய்ட்ஸ் நோய் இருப்பவர்களை இரண்டு வகையாக பிரிக்கிறது உலக சுகாதார ஆராய்ச்சி நிலையங்கள். முதலாவது வகை எய்ட்ஸ் கிருமி காவிகள் **(HIV Positive)** இரண்டாவது வகை, மரணத்தைத் தழுவுகின்ற நிலை.

### இதனைக்கண்டு பிடிப்பது எப்படி

எய்ட்ஸ் கிருமி எம்மைத் தொற்றியிருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள தற்காலத்தில் இரத்த பரிசோதனைகள் மூலம் இதனை அறிந்து கொள்ளலாம். வைரஸ் கிருமி தொற்றிய மறுநாளே இதனை இரத்த பரிசோதனை மூலம் கண்டு கொள்ள முடியும்.

### இது எவ்வாறு தொற்றுகிறது

எங்கிருந்து தோன்றியது என்பதனை கண்டறிவதில் உலக சுகாதார ஸ்தாபனங்கள் தோல்வி கண்டாலும் கூட இவை எவ்வாறு ஒரு எய்ட்ஸ் நோயாளியில் இருந்து இன்னொரு மனிதனுக்கு தொற்றிக் கொள்கிறது என்பதை கண்டறிவதில் வெற்றி கண்டுள்ளனர். கூடுதலாக பாலியல் தொடர்புகளினால் உண்டாகும் இந்த நோய் தன்னினச் சேர்க்கை விரும்புவோர்களிடத்தில் கூடுதலாக பரவியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஊசி மூலம் போதை மருந்து பாவித்தல், இதழுடன் இதழ் இணைத்து முத்தமிடுதல், இரு ஆண்களோ அல்லது இரு பெண்கள் இயற்கைக்கு மாறான முறையில் பாலியல் தொடர்பில் ஈடுபடுதல், விபச்சாரிகளுடன் பாலியல் தொடர்பு கொள்ளுதல் போன்றவை இந்தக்கிருமி தொற்றுவதற்கு இலகுவான பாலமாக அமைகிறது. எய்ட்ஸ் நோயாளியின் குருதி மற்றவரின் குருதியுடன் கலப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் இருந்தால் இக்கிருமிப் பரிமாற்றம் நடைபெறும். உதாரணமாக இதழோடு இதழ் சேர்த்து

தொடர்ச்சி 7ம் பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## ஈழபூமி விளம்பரப் பகுதி

### மணமகன்

30 வயது நிரம்பிய சைவ வேளாளர் குல பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு சகோதரர்கள் மண மகன் தேடுகிறார்கள். தகுந்த சீத னம் கொடுக்கப்படும். வி.இ.ஆ10

32 வயதுடைய கணவனை இழ ந்த பெண்ணிற்கு மணமகன் தேவை. வி.இ.ஆ11

29 வயது நிரம்பிய லண்டனில் கணக்கியலாளராயிருக்கும் மண மகளிற்கு மணமகன் தேவை. தகுந்த சீதனம் கொடுக்கப்படும். வி.இ.ஆ12

26 வயது நிரம்பிய லண்டனில் வசிக்கும் செவ்வாய்குற்றமுள்ள சைவ வேளாளர் குல மண மகளிற்கு மணமகன் தேவை. வி.இ.ஆ13

### மணமகள்

27 வயது நிரம்பிய டென் மார்க்கில் இருக்கும் மெதடிஸ்ற் சமய மணமகனிற்கு அழகிய மண மகள் தேவை. சீதனம் எதிர்பார் க்கவில்லை. வி.இ.பெ45

### விற்பனைக்கு

சிவப்பு நிற சீ இலக்க **Blue Bird** 2.0 கார் குறைந்த மை லேஜ். வி.இ.வி14

சில்வர் நிற ரீ இலக்க **Dutsun** கார் நல்ல நிலையில் **M.O.T & Tax** உடன் விற்பனைக்குண்டு. வி.இ.வி15

### தேவை

நியூ மோல்டன் பகுதியில் அறை கள் சாப்பாட்டு வசதியுடன் வாட கைக்கு உண்டு வாரம் £40 தொலைபேசி 081 949 8054.


# கலைஞர்களை ஊக்குவிக்குமா ஈழபூமி

செல்வி.ஜெசிந்தா ஜீவரட்ணம், நோர்த் அக்டன்

ஈழ பூமி ஆசிரியருக்கு!

**Saint Martin** அரசினர் ஒவியக் கல்லூரியில் 2ஆம் ஆண்டு பட்டதாரியாக பயிலும் நான் **Newham** ஆங்கிலப் பத் திரிகையில் விளம்பரமாகி இரு ந்த திரு.கிருஸ்ணராஜாவின் ஒவி யக் கண்காட்சியை பார்வையிட நானும் எனது உளவியல் பேரா சிரியரும் சக மாணவிகளும் **Tom Allen Gallery** க்குச் சென் றிருந்தோம்.

இந்த ஒவியக் கண்காட் சியைப் பார்வையிட இந்த நாட் டில் உள்ளவர்களே அதிகமாகப் போகிறார்கள். தமிழர்கள் ஒருவ ரையும் காணவில்லை. இந்த மாதம் 11ந் திகதியிலிருந்து 29ந் திகதிவரை இவ் ஒவியக் கண் காட்சி நடைபெற்றது.

நான் இங்கு பிறந்து வளர்ந்த பெண். எனக்குத் தமிழ் அதிகம் எழுதத் தெரியாது. எனது சகோ தரன் இந்த விமர்சனக் கட்டு ரையை எனக்காக எழுதுகிறார்.

வேதனை <u>(Agony)</u> எனப் பொருள்படும் தலைப்பில் பல பூச்சு வர்ணங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. அதிகமான படங்கள் பெண்கள் மூலம் தமிழ் மக்களுடைய இன்றைய நிலை யை வெளிப்படுத்துபவனாக இரு ந்தது. வேதனை என்ற படத்தில் பல பெண்கள் கூடியிருந்து ஒப்பாரி வைப்பது போல் காட் சிப் படுத்தப்பட்டுள்ளது. இந்தப் படம் என்னை மிகவும் கவர் ந்தது. இந்த ஒவியத்தில் திரு.கிருஸ்ணராஜா அவர்கள் தனது தூரிகையை மிகவும் லாவ கமாக பிரயோகித்துள்ளார். கறு த்த தடித்த கோடுகளால் நிகழ் ச்சியைத் திட்டவட்டமாக வரை யறுக்கிறார்.

அவரது எல்லா ஒவியங்க ளிலும் இந்தத் தன்மை காணப் படுகின்றது. எமது உளவியல் பேராசிரியர் இவரது ஒவியங் களை விமர்சிக்கும்போது இந்த ஒவியர் மிகவும் மென்மையான வராக இருக்க வேண்டும் என் றும், மக்களின் கஸ்ட நஸ்டங் களில் தானும் பங்கெடுப்பவராக இருக்க வேண்டும் என்றும், அவர் தன் மனதில் உள்ளதை அப்படியே வெளிப்படுத்துகிறார் என்றும் கூறினார். அது எனக்கு உண்மையாகவே பட்டது.

ஈழத் தமிழர்களிடையேயும் இப்படியான ஒரு திறமை மிக்க ஒவியர் இருக்கின்றாரா? என்று என் சினேகிதிகள் ஆச்சரியமாகக் கேட்டபோது அது எனக்குப் பெருமையை ஈட்டித் தருவதாக அமைந்தது. ஏனென்றால் இங்கு ள்ளவர்கள் இப்படியான கருத் துள்ள படங்களை இப்போதுதான் முதல் தடவையாக பார்க்கிறார் கள்.

திரு.கிருஸ்ணராஜாவின் ஒவி யங்கள் மற்றைய ஒவியர்களின் படைப்புக்களோடு எந்த வகை யிலும் குறைந்தவை அல்ல. அது மாத்திரமின்றி அவை தனித் தன்மை கொண்டவையாகவும் திகழ்கின்றன.

தமிழ் மக்களுடைய கலை, கலாச்சாரம் இவரது ஒவியங்கள் மூலம் பிரதிபலிக்கின்றது. இங்கு வசிக்கும் என்போன்ற இளம் ஒவியர்களுக்கு இவருடைய வழி காட்டல் அவசியமாகிறது. ஈழத் தமிழர்களில் ஒரு சிலரே நவீன ஒவியங்களில் சிறந்து விளங்கு கிறார்கள். அவர் போன்ற கலை ஞர்களை உங்களைப் போன்ற பத்திரிகையாளர்கள் தான் ஊக் கிவிக்க வேண்டும். ஆயினும், வியாபார நோக்கில்லாமல் உண்மையிலே கலையைக் கலை யாக மதிக்கின்ற இந்தக் கலைஞர் மிகவும் அருமையானவர். இவ ரைத் தமிழ் உலகம் மதிக்க வேண்டும். ■


TOM ALLEN GALLERY

invites you to the



PRIVATE VIEW
ON
11th Nov. 7pm - 9pm

AGONY

AN EXHIBITION OF
PAINTINGS
& SCULPTURES
BY
K.KRISHNARAJAH

ON 12th Nov. - 29th Nov.
Mon. - Sat. 10am - 6pm
AT
TOM ALLEN CENTRE
GROVE CRESCENT ROAD
STRATFORD
LONDON E15 1BJ
BOX OFFICE 081-519 6818
ADMINIST. 081-555 7289


*அன்பு வாசகரின் கவனத் திற்கு எமது கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கவும், அவர்களை ஊக்குவிக்கவும் ஈழபூமி என் றும் பின்வாங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஒவியங்கள் கைவசமிருப்பின் எமக்கு அனுப்பிவைத்தால் மகிழ்ச்சியுடன் பிரசுரிப்போம்.*

*ஆ-ர்*

# வடக்கில் தொடரும் துன்பங்கள்

தற்போது வடபகுதியில் இரா ணுவத்தின் தாக்குதலைவிட மரு ந்து பற்றாக்குறை, போதிய உண வின்மை ஆகிய காரணத்தால் பலர் பலியாகி வருவதாக யாழ்ப் பாணத்திலிருந்து வரும் செய் திகள் கூறுகின்றன. இதுவரை 200 இற்குமேற்பட்டோர் வாந்தி பேதியால் பாதிக்கப்பட்டு வைத் தியசாலைகளில் அனுமதிக்கப்பட் டுள்ளதாயும் இதில் 14 பேர் இதுவரை பலியாகி விட்ட தாகவும் பலர் கவலைக்கிடமான நிலையில் உள்ளதாகவும் தெரிய வருகிறது.

தற்போது பிறக்கும் குழந்தை கள் பால்மா பற்றாக்குறை, மரு ந்து பற்றாக்குறையினால் மிகவும் பலவீனமான நிலையில் உள்ள தாகவும் மகப்பேற்றின் போது பல தாய்மார் இறந்துள்ளதாகவும், இதனை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தும் அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது கவ லை அளிப்பதாக யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

## வடபகுதிக்காக மாட்டுவண்டிகள் இறக்குமதி

"அரசு 1500 பஸ்களை இறக் குமதி செய்யப்போவதாக அறி வித்துள்ளது, ஆனால் அதனால் யாழ்ப்பாண மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை அவர்களு க்காக முடிந்தால் 1500 மாடு களும் வண்டிகளையும் இறக் குங்கள் "

இவ்வாறு அண்மையில் பாரா ளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத்திட்டம் மீதான விவாத த்தில் கூட்டணியின் யாழ் மாவ ட்ட உறுப்பினர் கே. நவரத்தினம் தெரிவித்துள்ளார். அவர் மேலும், தற்போது யாழ்மாவட்ட மக்க ளுக்குத் தேவையானது அது ஒன்றுதான் என்றும், தமிழ் மக்களின் சடலங்களை ஏற்றிச் செல்ல இது உதவும் என்றும், நீங்கள் இறக்குமதி செய்யும் பஸ்களினால் அவர்களுக்கு எவ்வித பயனும் இல்லை எனவும் கூறியுள்ளார்.

அப்போது வாணிப அமை ச்சர் குறுக்கிட்டு, "நீங்கள் உங்கள் தொகுதிக்கே போகமுடியாமல் இருக்கின்றீர்கள்" என்று கூற, "நீங்கள் ஆட்சியில் இருக்கும் வரை நாம் அங்கு போக முடி யாது" என நவரத்தினம் பதில ளித்தார்.


## SAMRAS
*Video & Spices*

We Specialised in Old & New Tamil, Hindi & Malayalam Films

VISIT US FOR HIRE AND SALE AT BEST PRICE IN TOWN

Tamil, Hindi & Malayalam Film Sound Track,
Devotional & Classical Audio, Compact Disk & Records
Sri Lankan & Indian Groceries Retail & Wholesales
Temple Abishekam Ingredients also available from us.
Latest daily, Weekly, Monthly, Tamil Magazines.

**251A - 251B, Haydons Road**
**London SW19 8TX, U.K**
**Phone: 081-544 1686 Fax: 081-544 1745**


# ராஜீவின் கொலை தேடுதல் வேட்டை முடிவு

அண்மையில் இந்திய பொலீ ஸார் நடத்திய தேடுதல் வேட் டையில் தற்கொலை செய்து கொண்ட பெரிய சாந்தனுடன் ராஜிவின் கொலையில் சம்பந்தப் பட்டவர்களின் தேடும் படலத்தை பொலிஸார் முடிவுக்கு கொண் டுவந்தனர். இதில் சம்பந்தப் பட்டவர்கள் என்று கருதப்பட்ட சிவராசனும், சுபாவும் பெங்க ளூரில் தற்கொலை செய்து கொண்டது யாவரும் அறிந்ததே.

அருப்புக் கோட்டையைச் சேர் ந்த ரவி என்னும் இளைஞரை கடந்த மாதம் பொலீசார் கைது செய்து விசாரித்த போது இவ ருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உறவு யாழ்ப் பாணம் வரை சென்று பயிற்சி பெறுமளவிற்கு இருந்துள்ளதென தெரிய வந்துள்ளதாக தமிழ்நாடு பொலீசார் அறிவித்துள்ளனர்.

மேலும் இவரின் நண்பர் களான திராவிட கழகத்தைச் சேர்ந்த மூவர் கைது செய்யப் பட்ட போது இவர் பிரபாக ரனுக்கு எழுதிய கடிதமும் கைப் பற்றப்பட்டுள்ளது. இக்கடிதத்திலி ருந்து ராஜிவின் கொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப் பட்டிருப்பது ஊர்ஜிதம் செய்யப் பட்டுள்ளதாக பொலீசார் அறிவி த்துள்ளனர்.

# வடபகுதிக்கு இப்படியும் தடை


வடபகுதிக்கு பதிவுத் தபால் களை ஏற்கமுடியாது என கொழு ம்பில் உள்ள தபால் நிலயங்கள் மறுத்து வருகின்றன. இதற்கு ஆதாரமாக கொழும்பில் தமிழர் அதிகமாக வாழும் பகுதியில் உள்ள பெரிய தபால் நிலைய மொன்றில் வடபகுதிக்கு பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என பகிரங்கமாகவே எழுதி ஒட்டப்பட்டுள்ளது. இது பற்றி அதிகாரிகளிடம் வினாவி யபோது வடபகுதிக்கு பதிவுத் தபால் பார்சலில் சைக்கிள்

தொடர்ச்சி 7ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






'அடேய்! நாற்பத்து ஒன்று நின்றுட்டது. என்ன அறுப்போ தெரியாது'

முன்னே நின்றவன் திரும்பிக் கேட்டான்.

'அதுக்கென்ன பரவாயில்லை, இரண்டு எஞ்சினில இப்படியே போவமா'

பின்னேயிருந்து ஆத்திரத்தோடு கத்தினான்.

'மடக்கதை கதைக்கிறாய் நேவி துரத்தினா இந்த இரண்டிலையும் ஓடித்தப்ப முடியுமா. இது காபறேட்டரிலை அடைப்பு ஏற்பட்டிருக்கும் அல்லது பிளக்கில் காபன் பிடிச்சிருக்கும். பிளக்கை கழட்டி பார்ப்பமா'

எஞ்சின் சப்தத்தை மீறி அவர்கள் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது.

அடுத்து இரண்டு எஞ்சின்களும் உடனடியாக நிறுத்தப்பட்டன. படகு நின்றதால் துள்ளல் பாய்ச்சல் குறைய அவர்கள் உடல் வேதனையை சிறிது அசுவாசப்படுத்தி ஆறுதல் கண்டார்கள். ஆனால் எல்லோர் மனதிலும் இப்போது நேவி வந்தால் என்ன செய்வது என்ற அச்சம் ஆழமாக அலைமோதியது.

'டேய்! கவனமாக நாலு பக்கமும் கழுத்தை வளைச்சுப் பார் ஏதும் புள்ளி தெரியும்'

முன் அணியத்திற்கு மேல் ஏறிநின்ற ஓட்டி வேறுபடகுகளின் அசுமாத்தம் தெரிகின்றதா என்று பார்வையால் துளாவினான்.

படகு ஓடாமல் நின்றதால் முன்னையதைப்போல் துள்ளல் பாய்ச்சல் இல்லாவிட்டாலும் இடைவிடாமல் தொட்டில் ஆட்டம் மோசமாக படகில் இருந்தவர்களை இரு பக்கமும் புரட்டி எடுத்தது. மேலும் இருவர் புதிதாக வாந்தி எடுக்க தொடங்கினார்கள்.

ஒரு இளைஞன் களைப்பு மேலீட்டால் தலையை சங்கர் மடியில் கிடத்தினான். சங்கர் ஆதரவாக அவன் தலையை வருடிக் கொடுத்தான்.

பரந்த . அந்தக் கடல்பரப்பில் தன்னந் தனியாக அந்தப் படகு மிதப்பது இனம் புரியாத ஏகாந்த உணர்வை அவனுக்குப் புதிதாக தட்டி எழுப்பியது. அந்த இளைஞன் இவன் மடியில் உரிமையுடன் முகத்தைப் புதைத்திருப்பது கூட அந்த உணர்வுக்கு மெருகூட்டுவதாகவே இருந்தது.

காற்சட்டைப் பையில் ஏதோ ஒன்று துருத்தியது காலை சிறிது தூக்கி வலது கையினால் தடவிப்பார்த்தான்.

அது ஆண்கள் அணியும் ஐம்பொன் வளையல்!

நிர்மலா நாதனிடம் கொடுத்தனுப்பி இருந்தாள்.

மூச்சிரைக்க கரைக்கு ஓடோடி வந்து நாதன் அதை அவனிடம் கொடுத்தான்

இறுதி நேரம் வரை நாதனை காணாமல் போய்விடுவோமோ என்று தவித்திருந்த சங்கருக்கு அது முழு திருப்தியைக் கொடுத்தது.

நாதனோடு பத்து நிமிட நேரமாவது கரையில் நின்று பேச முடிந்தது.

நிர்மலா முதலில் அதிர்ச்சியால் எதுவும் பேசவில்லையாம். சங்கரின் முடிவு அவளைப் பெரிதும் குழப்பி இருந்தது.

சிறிது நேரம் நாதன் பேசுவதை ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்தவள் அவன் பேசி முடிந்ததும் வழிந்தோடும் கண்ணீரை மறைப்பதற்கு கடுமையாக பிரயத்தனப்பட்டாள். ஒரு வருடத்திற்கு முன்னம் மாணவர் அமைப்பொன்று யாழ்பாணத்தில் நடாத்திய பாதயாத்திரை ஒன்றில் கலந்து கொள்ளும்படி அவளது கல்லூரிக்கு வந்து பிரச்சாரம் மேற்கொண்ட கம்பீர இளைஞனாக அவளுக்கு முதன் முதலில் அறிமுகமான சங்கர், இவ்வளவு விரைவில் ஆயுதப் பயிற்சிக்காக அக்கரை செல்லும் முடிவெடுப்பான் என்று அவள் எண்ணியிருக்கவில்லை.

சங்கர் அப்போது இறுதியாண்டு மாணவன் மாணவர் போராட்டம், உண்ணாவிரதம், ஊர்வலம் என்றால் அவனுக்கு தண்ணீர் பட்ட பாடு. சிறையில் இருந்து தம் மாணவர் தலைவர் விடுதலையாகி வந்த போது ரயில் நிலையத்தில் கொடுக்கப்பட்ட பிரமாண்டமான வரவேற்பின் வெற்றிக்கெல்லாம் சங்கரின் பங்களிப்பு அநேகம்.

சங்கரின் மாணவ வாழ்வு முடிந்த வேளையில் அவன் சார்ந்த மாணவர் இயக்கமும் அதன் போராட்டங்களும் ஏனோ அமைதிக்கு வந்தன.

ஆனால் நிர்மலா மாத்திரம் அப்படி இல்லை.

அவன் இதயத்தை அமைதி இல்லாமல் அலைக்கழித்து பூதாகரமாக ஆட்டுவித்துக்கொண்டிருந்தாள்.

குழப்பம்!

தடுமாற்றம்!

மயக்கம்!

தவிப்பு!

எல்லாம் ஒரு முடிவுக்கு வந்து புதியதொரு இலட்சிய வாழ்வுக்கு தன்னை தயார் படாத்திக்கொண்டு வளர்ந்தபோது அப்பாவின் அனுபவ முத்திரைகள் அவனை அனாயசமாக வழிகாட்டும்.

'மகன்! ஒரு கம்யூனிஸ்டாக வாழ்வது எவ்வளவு புனிதமானது தெரியுமா. வெறுமனே கட்சி அங்கத்தவனாகிற பெருமை மட்டும் போதாது. மார்க்சிசம் ஒரு வாழ்கை முறை உயிரோட்டமான வாழ்க்கை அது. ஆனால் எங்கட கட்சியில் பலர் அதை உணர தவறிவிட்டாங்கள். தமது சொந்த நலனுக்காக-ஒருநாள் மகிழ்ச்சிக்காக- சிலர் பத்து ரூபா லாபத்துக்காக எல்லாம் கூட தங்கள் ஆன்மாவை கொண்றழிச்சாங்கள். ஒரு மார்க்சிசவாதிக்கு சுயநலமும், சோம்பேறித்தனமும் கட்டோடு இருக்கப் படாது. அவனுக்கென்று இருக்கும் ஆசாபாசம் எல்லாமே ஒரு இலட்சிய வாழ்வுக்கு கட்டுப் பட்டு இருக்க வேண்டும். காதல், திருமணம், இவற்றிலெல்லாம் இது மிகமிக முக்கியம்"

ஒரு மத்தியதர வர்க்கப் பெண்ணான நிர்மலாவின் கனவுகள், கற்பனைகள், மோக மயக்கங்களின் பலவீனங்களைப் புரியும் அளவிற்கு இந்த வழிகாட்டல்கள் சங்கருக்கு போதுமானதாக இருந்தது.

எந்த வகையிலும் அவள் அவனுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கமாட்டாள் என்பது அவனுக்கு உறுதியாயிற்று.

அதே சமயம் பிழையான கற்பனையிலோ அல்லது ஆற்றாமை பரிதாபத்திலோ அவள் இவனில் ஏமாறுவதற்கு வாய்ப்புகள் நிறையவே இருக்கின்றன என்பது இவனுக்கு தெளிவாகத் தெரிந்தது. அந்த எச்சரிக்கையில் மிகவும் எட்ட நின்றே அவன் தன் காதலை வளர்த்துச் சென்றான். அவனது அந்த விலகலில் மிளிர்ந்த அலட்சியம் கூட அவளுக்கு விருப்பமானதாகவே இருந்தது.

அந்த அலைகடலின் மத்தியில் பழுதடைந்த படகில் எல்லோரும் அச்சத்துடன் பரபரப்பாக இருக்கும் போது இவனால் மட்டும் அந்த மிருதுவான் உணர்வுகளில் லயிக்க முடிந்தது.

அந்த ஐம்பொன் வளையலை மீண்டும் ஒரு தடவை கைகளால் தடவிப் பார்த்துக் கொண்டான்.

அவனுக்கு உள்ளூர சிரிப்பாக இருந்தது.

அவள் நினைவை இதயத்தில் மட்டும் சுமந்தால் போதாது, கண்களிலும் சுமக்க வேண்டும் என்ற பேராசையா அவளுக்கு! அவன் கரத்தில் காணும் போதெல்லாம் கண்கள் கனத்து குழம்ப வேண்டுமோ!

அவன் ஆயுதப் பயிற்சிக்காக இந்தியா செல்வதை நாதன் கூறிய பின்பு திரும்பி வர ஆறு மாதங்கள் செல்லும் என கூறினாலும், அது வருடக் கணக்கில் கூட செல்லும் அல்லது அவனைக் காணாமலேயே போகக்கூடும் என்ற அச்சமேலீட்டில் அவள் ஒரு கணம் அழுது வடிந்தவள் மறு கணம் நாதனை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு பரபரப்பாக கையில் கிடந்த காசைபொறுக்கி எடுத்துக் கொண்டு கடைக்கு ஓடிப்போய் அவசர அவசரமாக அதை வாங்கி நாதனிடம் கொடுத்தனுப்பியிருக்கிறாள்.

காபறேட்டரை கழட்டி புதுப் பிளக்கை மாற்றிய பின்பு முழு மூச்சாக பழுதடைந்த இஞ்சினை இயக்கிய போது பந்தயக் குதிரையின் வேகத்தோடு அது பட்டென்று வேலை செய்ய ஆரம்பித்தது.

எல்லோர் முகத்திலும் ஆனந்தக் கிளர்ச்சி.

மீண்டும் புதுவேகத்தில் படகு வடக்கு திசையை குறிவைத்து ஓட ஆரம்பித்தது. ஓட்டிகளின் தலைவன் போல் சகஓட்டிகளை இதுவரை அதட்டி, மிரட்டி எரிந்து விழுந்தவன் அதற்கெல்லாம் சேர்த்தாற்போல் மன்னிப்புக் கேட்பவன் போல் மிகக்குழைவாக இப்பொழுது அவர்களுடன் பேச்சுக் கொடுத்தான்.

'பெற்றோலை வடிச்சு ஊத்தச் சொன்னா, கரையில் நிக்கிறவங்களுக்கு எங்கை விளங்கப்போகுது. அப்படியே ஊத்துவாங்கள். நாமதான் நடுக்கடலில் நின்று தத்தளிக்கிறது. எல்லோரும் கழகம் கழகமென்று பெருமையாகச் சொல்லிக்கொண்டு வந்திடுவாங்கள். ஆனால் கொடுத்த வேலையை மட்டும் ஒழுங்காக செய்யிறதில்லை."

முன் அணியத்தில் நின்றவன் இப்போது உற்சாகமாக பேச்சில் கலந்து கொண்டான்.

'நாங்கள் கழகம் என்ற படியால் இப்படி கஸ்டப்படுகிறம். கூலிக்கு கடத்தல் வண்டி ஓட்டியா பிடிச்சிருந்தா இப்படி எல்லாம் கஸ்டப் படுவானுகளா'

'அவங்களுக்கு காசுலதான் குறி. விடுதலை என்று வந்தால் மட்டும் தான் இப்படி கஸ்டங்களை சகிச்சுப் போகலாம்'

தலைமை ஓட்டி பெற்றோல் மணந்ததால் ஏற்பட்ட அருவருப்பை காறி கடலில் துப்பி விட்டு சொன்னார்.

'தரையில் போற வண்டி என்றால், ஆமி துரத்தினா எப்படியும் விட்டுட்டாவது ஓடித் தப்பலாம். இது கடலில போற வண்டி. நேவி துரத்தேக்கை எஞ்சின் பழுதாப் போன பின்பு நாம என்ன செய்யிறது. இந்த நாற்பது எஞ்சின் வாங்கின காலத்தில் இருந்தே இப்படித் தான். புதிசு ஒன்று வாங்க வேணுமென்று நானும் தான் சதா சொல்லிப் பார்கிறேன். ஆரு கேட்கிறான்' என்றவர் உரத்த குரலில் சொன்னார்.

'ஒன்று மட்டும் நிச்சயம். எனக்கெல்லாம் சாவு கடலில்தான்'

அந்த வார்த்தைகளை தாங்க மாட்டாததுபோல கடல் அலை ஒன்று துள்ளி எழுந்து படகை எம்பித் தள்ளியது.

அந்த வார்த்தைகளால் நிலை குலைந்து போன அவர்கள் கண நேரம் அமைதியாக இருந்தார்கள்.

எல்லோர் கவனமும் இப்போது அவர் பக்கமே திரும்பியது. அருகில் இருந்த இளைஞன் சங்கரின் தோளைப் பற்றிக் கொண்டு காதிற்குள் குசு குசுத்தான்.

'இவர் தான் சேரன். சிவராசா பொலீஸ் கொலைவழக்கில் நாலாவது எதிரி. மட்டக்களப்பு சிறை உடைப்பில் தப்பி வந்தவர்'

ஓட்டிகளின் தலைவன் போல கம்பீரமாக அந்த படகின் பின்புறம் இருந்த கரிய, நெடிய உருவத்தைக் காட்டிக் கூறினான். படகில் இருந்தவர்கள் எல்லோரும் இப்போது குறிப்பாக அவரைப்பார்க்கத் தொடங்கினார்கள்.

'இவர் திறமையான ஓட்டி. நேவிக்கு பயமே கிடையாது. சிறையில் ஆறு வருசமாக இருந்தவர். தப்பி வந்த பின்பும் தொடர்ந்தும் இப்படி கடலில் கஸ்டப்படுகிறார்"

எல்லோரும் வாஞ்சையுடன் சேரனைப் பார்த்தார்கள். அவர்கள் பார்வையில் நிழலாடிய சிநேகபாவத்தை இனம் கண்ட பூரிப்பை வெளிக்காட்டாமல் சேரன் தன் வேலையில் கருத்தாக இருந்தான்.

தொடரும்

RANJIT & COMPANY
SOLICITORS
Tel: 081-767 9717
Fax: 081-767 9684
1st Floor, 176, Mitcham Road, Tooting, London SW17 9NJ
Freehold Leasehold
Conveyancing
Residential & Commercial
FIXED FEE
COMPETITIVE QUOTES BY PHONE
7 DAYS A WEEK
FOR SPEEDY CONVEYANCING PHONE NOW
IMMIGRATION
MATRIMONIAL & INJUNCTION WORK
LANDLORD & TENANT DISPUTE
ACCIDENT CLAIMS
LICENSING
HOUSING PROBLEM
MORTGAGE ARREARS
HARRASSMENTS
TENANCY AGREEMENT
NOTICE TO QUIT
REPRESENTATION AT POLICE STATION IS COVERED BY LEGAL AID ALL CRIMINAL COURT WORK UNDER TAKEN
PHONE 081-767-9717

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாரதர் சொல்கிறர்!

1) ரூட்டிங்கை அண்மித்த பகுதியில் வசிக்கும் இவர் இயக்கம் ஒன்றின் பழைய உறுப்பினர். பெண் விடுதலை தொடர்பாக சதா சாற்றிக்கொள்ளும் இவர் தனது மனைவியை கண்டபடி உதைப்பதாக அவரது நெருங்கிய நண்பர் கவலைப்பட்டாராம்.

2) பெரிய வழக்கறிஞர் என்று சொல்லிக்கொள்ளும் இவர் ரூட்டிங் பெக் என்னும் இடத்திற்கு அண்மையில் தனது ஸ்தாபனத்தை வைத்திருக்கிறார். இவரிடம் குடும்ப விடயமாக கலந்தாலோசிக்க வாடிக்கையாளர்கள் பயப்படுகிறார்களாம். காரணம், இவரிடம் கலந்தாலோசித்த விடயங்களை வெளியாரிடம் அலட்டி வருகிறாராம்.

3) புளட் அமைப்பைச் சேர்ந்த இவர் தற்போது முன்பு வசித்த ஈஸ்ராம் என் னும் இடத்தை விட்டு மாறி குறைடன் என்ற இடத்துக்கு வந்துவிட்டாராம் எது வித வருமானமும் இல்லாத இவர், ரூட்டிங் என்ற இடத்தில் உள்ள ஒரு வர்த்தகருக்கு 25000 பவுண்கள் கடன் கொடுத்திருக்கிறாராம். மக்கள் சொத்து எப்படி எல்லாம் போகிறது பாருங்களேன் என்று ஒரு தமிழன்பர் மனம் நொந்தார்.

4) அண்மையில் லண்டனில் வெளிவந்த தமிழ் பத்திரிகை ஒன்றில் ஒரு அமைப்பு தொடர்பாக செய்தி எழுதிய அந்த நிருபருக்கு எச்சரிக்கை தொலைபேசி அழைப்புக்கள் வந்து கொண்டே இருக்கின்றதாம்.

5) புரட்சி புரட்சி என்று புலம்பித் திரிந்த அந்தப் பிரமுகர் கலியாணம் செய்த மறுநாளே இது பற்றிக் கதைப்பதை நிறுத்தி விட்டாராம்.

6) கொழும்பில் தங்கியிருக்கும் பழைய இயக்கம் ஒன்றின் தலைலர் ஒருவர் பிரேமதாஸவுக்கு கைக்கூலியாக செயல்படுகிறாராம். இவரது குழுவில் உள்ள இளைஞர்கள் ஸ்ரீலங்காவுக்கு செல்வோரை பொலிசாரிடம் பிடித்துக் கொடுத்துவிட்டு, பின் அவர்களது உறவினர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு விடுதலை செய்ய வழிவகுக்கின்றார்களாம்.

7) சினிமா நடிகை ஒருவரை தொழிலதிபர் என்று கூறித் திருமணம் செய்த அந்த மனிதர், தான் வாழ்க்கையில் விட்ட பெரிய பிழை இது என்று தன் நண்பர்களிடம் கூறிக் கவலைப்படுகிறாராம்.

8) நல்லவர் என்று நம்பி வீட்டில் இடம் கொடுத்தது என்தவறு என்ன செய்வது எல்லாம் விதி என்கிறார் அந்த மனிதர். கவலையுடன் தாடி வளர்த்துக்கொண்டு திரியும் இவரது மனைவியை அந்த வீட்டிலே வாடகைக்கு இருந்த ஒருவர் கூட்டிக்கொண்டு ஓடிவிட்டாராம்.

9) அனிதா என்கின்ற ஒரு நடிகையின் பின்னே திரியும் ஒரு லண்டன் பிரமுகர் ரூட்டிங்கில் உள்ள ஒரு வர்த்தக நிலையத்தின்முன் ஒரு தமிழ் வாலிபரை அடித்தாராம். காரணம் என்ன என்று வினவியபோது, இவர் அம்மாவைப் பார்த்து நக்கலாகச் சிரித்தார் அதனால்தான் அடிக்கிறேன் என்றாராம்.

10) வவுனியாவின் பழைய பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களில் ஒருவரான இவர் கனடாவில், மனைவி இறந்த மறுமாதமே மறுமணம் செய்து கொண்டாராம்.


# S.K.Sound Service


50, Renmuir Street
Tooting, London SW17
Tel: 081-767 7129

For Wedding Parties
Disco Events
Birthdays & All other Social Events

7 Days a Week


# அழிந்துபோன உயிரினம்

*விசுவன்*



இற்றைக்கு சுமார் 248 மில்லியன் வருடங்களுக்கு முன் சிறிய முலையூட்டிகளிடமிருந்து டைனசோர்கள் எனும் ஊர்வன ஆட்சியை கைப்பற்றின. அப்பகுதியில் ஏற்பட்ட இனம் காணாத பிரளயத்தினால் பல சிறிய முலையூட்டிகள் அழிந்து போயின. இவ் அழிவே அக் காலப்பகுதியில் டைனோசோர்கள் பெருகுவதற்கு காரணம்.

இவற்றுள் கிட்டத்தட்ட 300 தற்போது விஞ்ஞானிகளினால் இனம் காணப்பட்டுள்ளன. மிகப் பெரியது எனக் கண்டுபிடிக்கப்பட்ட டைனசோரை ஸிஸ்மோசௌரஸ் (பூவி அதிர்வை ஏற்படுத்துவது) என புதை பொருள் ஆராட்சியாளர்கள் பெயரிட்டுள்ளனர். புதிய மெக்சிக்கோ பகுதியில் வாழ்ந்த இவ் டைனசோர் 140 அடி வரை வளருமாம். அது மட்டுமல்ல அதன் நிறை 60 இலிருந்து 90 தொன் எடையாக இருந்துள்ளது. இப் பிராணியின் தலை ஒரு சாதாரண குதிரையின் அளவாகும்.

சுமார் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஆட்டிக் பகுதியிலிருந்து மெக்சிக்கோ வளைகுடா வரை, கிட்டத்தட்ட ஒரு மில்லியன் ஆண்டுப் பகுதிக்கு 200 மைல் என்ற வீதத்தில் நிலப்பரப்பு தண்ணீருள் மூழ்கத் தொடங்கியது. உலகத்தின் கூடுதலான டைனசோர்கள் இப்பகுதியையே ஆக்கிரமித்திருந்தன. இவ் ஊர்வன வாழ்ந்த நிலப் பரப்பு குறையவே இவை தமக்குள் மோதுப்பட்டு இறக்கத்தொடங்கின. இதுவே இவற்றின் அழிவுக்கும் காரணமாக அமைந்தது.


# Jeyam Electrical & Plumbing

★ Plumbing ★ Heating
★ Electrical Work
★ Bathroom Tiling ★ Plastering
★ Indoor & Outdoor Decoration

Also 24 hours Emergency work undertaken
For your information call Jeyam on 081-903 4646


# மந்திரத்தால் குழந்தையா?

ஊர்க்குருவி

மந்திர சக்தியினால் பெண்கள் கருவுற்று குழந்தைகளைப் பெற்றனர் என்றே ஆதிவாசிகள் நம்பினர். பசுபிக் தீவுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளிலிருந்து பின் வரும் கருத்து நிரூபணமாகியது.

திருமணங்கள் இறுக்கமற்ற பந்தங்களாக ஆரம்பமாகிய காலகட்டத்திலும் கூட அங்குள்ள பழங்குடிகள் தந்தை என்னும் ஸ்தானத்தினை அறியாதிருந்தனர். ஒரு சந்தர்ப்பத்தில் தனது மனைவியை விட்டு இரண்டு வருடங்கள் பிரிந்த கணவன் மீண்டு வந்த போது அவள் ஒரு குழந்தைக்கு தாயாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டான். அத்தாயின் கணவன் என்ற முறையில் அவனே அக்குழந்தைக்கு தந்தை எனக் கருதப்பட்டான். அவள் வேறொருவனுடன் உடல் உறவு கொண்டதன் விளைவாகவே இக் குழந்தை உண்டாகியதாகையால் இவன் அந்தக் குழந்தைக்கு எப்படித் தந்தையாக முடியும் என்று ஆய்வாளர்கள் எழுப்பிய வினாக்கள் அப்பழங்குடியினருக்கு விளங்கவேயில்லை. இந்த நிகழ்ச்சி நடந்தது மெலனீசியாவில்.

www.tamilarangam.net



## அகிம்சையில் இருந்து......

8ம் பக்க தொடர்ச்சி

ந்து, மக்களிடம் இருந்து அந்நியப் படும் செயல்களாக அமைந்தன.

சாதி என்கின்ற போர்வையில் ஒடுக்கப்பட்ட மக்களில் இருந்து கூடுதலான அங்கத்தவர்களைக் கொண்டிருந்த இந்த இயக்கம், அவர்களுக்கு அடிப்படைப் பிரச்சனையை விளங்கப்படுத்தி பூரண தெளிவைக் கொடுக்காது விட்டமை இந்த இளைஞர்கள் தமக்கு அதிகாரம் கிடைத்த போது தம்மை ஒடுக்கிய மக்களிடம் நடந்து கொண்ட முறையிலிருந்து புலப்பட்டது.

இது மட்டுமல்லாது, பரிசோதனைக் கடவைகளில் இந்திய இராணுவத்துடன் நின்ற இந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் அநாகரீகமான முறையில் பெண்கழுடன் நடந்து கொண்டமை, தூசணை வார்த்தைகளை பொது இடங்களில் பாவித்தமை, வயோதிபர், சிறுவர் என்ற வித்தியாசம் இன்றி மரியாதை இன்றி ஏசியமை போன்ற செயல்கள் இவர்கள் இனிமேல் காலங்களில் மக்களிடம் திரும்பி வரமுடியாது என்ற நிலையை தோற்றிவித்தன. ஈரோஸ் இயக்கம் தத்துவம் மட்டுமே பேசியமையும் நடைமுறைச்சாத்தியங்கள் எதனையும் கொண்டிராதமையும் இவர்கள் மக்களால் அடையாளம் காணப்படாத ஓர் அமைப்பாக மாறியதற்கான காரணங்களாகும். விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குப் பயந்து கொள்கைகளை அடிக்கடி மாற்றிக் கொண்ட இந்த இயக்கம் விடுதலை பெற்றுத்தரும் இயக்கம் என்ற நம்பிக்கையை முற்றாக மக்கள் மணங்களில் இருந்து அகற்றி விட்டது.

இனி ஆராயப்படவேண்டியது இராணுவமார்க்கமே ஒரே வழி என்று அடையாளம் கண்டு கொண்ட இயக்கங்கள்.

## தப்பென்றால்.....

6ம் பக்க தொடர்ச்சி

அவர்கள் அவனை அந்த சித்திரவதை முகாமுக்கு அழைத்துச் சென்ற மறு வினாடியே அவன் ஐயா ஐயா என்று கத்தும் சத்தம் அந்த சுற்றுவட்டாரத் திற்கே கேட்டது. ஐயா என்னை அடியாதையுங்கோ. நான் தெரியாமல் கேள்வி கேட்டுப்போட்டன். இனிமேல் கதைக்கமாட்டன். அவனது வார்த்தைகள் ஒவ்வொன்றும் என இதயத்தைச் சுட்டெரித்துக் கொண்டு சென்றன.

ஒரு மணி நேரம் வரை அவ'ன் அடிக்கப்பட்டான்.

அவனுடன் கூடித்திரிபவர்கள் ,சினேகிதர்கள் யார் யார் என்று கேள்வி கேட்டு அடித்த போதும் தன் இறப்பிலும் மற்றவர்களைக் காப்பாற்றும் மனப்பாங்கு அவனுக்கு மட்டும் தான் உரித்தானது. இறுதியாக அவன் நிலத்திலே படுக்க வைக்கப்பட்ட போது அவனுக்குப் புரிந்திருக்க வேண்டும். தன் இறுதிக் கணங்களை எண்ணும் நேரம் வந்து விட்டது என்று. ஆனந்தனின் தலை இரண்டு துண்டாக வெட்டப்பட்டதும் அவனைப் புதைப்பதற்காக இரண்டு நபர்கள் அவனை இழுத்துச் சென்ற காட்சி இன்னும் எனக்கு நினைவிருக்கிறது.

ஆனந்தனை நாட்டுக்கு அனுப்ப போகிறோம் என்று கூறிய போது அவன் கூறிய வார்த்தைகள் என்காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. நான் நாட்டுக்குப் போறன். போய் முதல் வேலை அம்மாவைப் பாக்கிறது தான். அந்த மனுசி ஒரே அழுகையாய் தான் இருக்கும் என்று நினைக்கிறன்...........

ஆனந்தன் இன்னும் இரண்டு மாதத்திலை வாறன்

எண்டு சொன்னவன். கவலைப் படாதையுங்கோ பொன்னம்மாக்கா. அவனை நான் கூட்டிக் கொண்டு வந்தால் சரி தானே. என்று ஆறுதல் கூறிவிட்டு கிளம்பிய போது அவனது அக்கா கனகமணி அழைத்து.. எனக்குத் தெரியும் தம்பி ஆனந்தனை............. அந்த உள்ளத்தை ஆறுதல் படுத்த என் நாவினால் எந்த வார்த்தைகளையும் உச்சரிக்க முடியவில்லை.

யாவும் கற்பனை

## கிழக்கில்...

1ம் பக்க தொடர்ச்சி

இந்த வெள்ளம் மேலும் அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

## பிரச்சனை பற்றி...

1ம் பக்க தொடர்ச்சி

தக் குழு பிரபாகரனினால் அண்மையில் தெரிவு செய்யப்பட்டு இந்தப் பொறுப்பை ஒப்படைத்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. யுத்த நிறுத்தத்தை கொண்டு வருதலும் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு ஒரு சாதகமான தீர்வை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதுமே இந்தக் குழுவின் முக்கிய பொறுப்பாகும்.

## கருணாநிதி...

1ம் பக்க தொடர்ச்சி

படலாம் என்றும் கூறினார். நாளையும் நாளை மறுதினமும் நடக்கவிருக்கும் தி. மு. க வின் பொதுக் கூட்டத்தை யாரும் குழப்ப முனையலாம் என்ற காரணத்திற்காகவே இவர் இது பற்றி கருத்து வெளியிடவில்லை என்றும் தெரிய வருகிறது.

## கையளிப்பு

அண்மையில் நடந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கூட்டத்தில் திருமதி சந்திரிகாவிடம் அதிகாரங்களை ஒப்படைத்துள்ளார் இக் கட்சியின் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க. சிறிது காலம் ஓய்வெடுக்க விரும்பும் திருமதி ஸ்ரீமா தற்காலிகமாகவே இவ்வதிகாரங்களை சந்திரிகாவிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. திருமதி சந்திரிகா குமாரணதுங்க அண்மையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒன்று சேர்ந்தது யாவரும் அறிந்ததே.

## நாரதர் சொல்கிறார்!

அனிதமான பட நடிகையின் பின் திரிந்த அந்த வயதானவருக்கு பெரிய ஏமாற்றம்ஏற்பட்டுள்ளதாம். மனைவியை உதாசீனம் செய்து விட்டு அந்த நடிகையின் பின்னால் திரிந்த இவரிடம் இருந்து வறுகக் கூடிய அளவு வறுகிய பின் அந்த நடிகை பரீஸில் உள்ள அவளது காதலனிடம் போய்ச் சேர்ந்துவிட்டாராம்.

விம்பிள்டன் பிள்ளையார் கோவிலுக்கு ஞாயிறு தோறும் போகும் அந்தப் பெரிய மனிதர் கடவுளைக்கும்பிடுவதில் அக்கறை இல்லையாம். அப்படியானால் ஏன் அங்கு செல்கிறீர்கள் என்று கேட்ட போது ஞாயிற்றுக் கிழமைகளில் சாப்பாடு வயிறு முட்டக் கிடைக்கிறது அதனால் தான் என்று மெல்லிய குரலில் கூறினாராம்.

அண்மையில் நடந்த சிரண்டிப் கிறிக்கட் கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவுக்கு வந்திருந்த அந்த இளைஞன்தான் வடமராட்சியைச் சேர்ந்தவன் எனக்கு மட்டும் தான் அறிவு கூட இருக்கிறது ஏன்று கூறினாராம்.இதனைக் கேட்டதும் அங்கு இருந்தவர் கள் சிரிக்க ஆரம்பித்தனராம். ஆத்திரம் அடைந்த அந்த இளைஞன் மண்டபத்தின் முன்புறமாக உள்ள கதவின் கண்ணாடிகளை உடைத்துவிட்டு வெளியேறினார். இது பற்றிய தகவல் பொலீசாருக்குக் கிடைக்கவே அவர் வழியில் வைத்துக் கைது செய்யப்பட்டாராம்.

பிரேமதாஸவிற்கு எதிராகக் கொண்டுவந்த லலிதரின் பிரேரணையை ஆதரித்த அந்த அமைப்பின் தலைவரைக் கொல்ல அந்தர ங்க முயற்ச்சிகள் மேற்கொள்ளப் படுகின்றதாம். எதற்கும் அஞ்சாத அந்தத் தலைவர் பிரேமதாஸவின் பொட்டுக்கேடுகளை பகிரங்கமாக பேசிவருகிறார்.

பிரேமதாஸவிற்கு எதிரான பிரேரணையை ஆதரித்து கையொப்பம் இட்ட ஒரு தமிழ் எம்.பி. தான்தவறுதலாகக் கையெழுத்துப் போட்டுவிட்டேன் என்று பிரேமாவுக்கு மன்னிப்புக் கடிதம் எழுதினாராம். இவன் எல்லாம் ஒரு எம்.பி. இவனுக்கு விடுதலை வேறை பேச்செதற்குஎன்று ஒரு வயோதிபர் தன் நண்பரிடம் கூறி மனம் நொந்தாராம்.

கள்ள மோட்கேச் எடுத்து வீடு வாங்கிவிட்டேன். என்ன நடக்கப் போகிறதோ தெரியாது. என்று பீதியில் பிதற்றுகிறாராம் அந்த கொலியர்ஸ்வூட் இடத்தில் வீடு வைத்திருக்கும் மனிதர். இவரருக்கு மோர்ட்கேஜ் செய்து கொடுத்தவர் அண்மையில் கைதாகியுள்ளாராம்.

1984-86 பகுதியில் அப்பெரிய அமைப்புடன் சகவாசம் செய்த அந்த நபர் அண்மையில் விம்பிள்டன் கோவிலில், அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லாது அது அடுத்த கணமே கொன்று விடும் என்று புலம்பினார். காரணம் கேட்டபோது துர்க்கைஅம்மனின் நகை எடுக்க பொறுப்பாக சென்றவர் அவ்வாரமே தவறுதலாகக் குண்டு வெடித்த மாண்ட கதையை நினைவு கூரினாராம்.

RANJIT & COMPANY

SOLICITORS

Tel: 081-767 9717
Fax: 081-767 9684

1st Floor,
176, Mitcham Road,
Tooting,
London SW17 9NJ

Freehold
Leasehold
Conveyancing
Residential & Commercial
FIXED FEE

COMPETITIVE QUOTES BY PHONE
7 DAYS A WEEK
FOR SPEEDY CONVEYANCING PHONE NOW

IMMIGRATION
MATRIMONIAL & INJUNCTION WORK
LANDLORD & TENANT DISPUTE
ACCIDENT CLAIMS
LICENSING

HOUSING PROBLEM
MORTGAGE ARREARS
HARRASSMENTS
TENANCY AGREEMENT
NOTICE TO QUIT

REPRESENTATION AT POLICE STATION IS COVERED BY
LEGAL AID ALL CRIMINAL COURT WORK UNDER TAKEN
PHONE 081-767-9717

S.K.Sound Service

50, Renmuir Street
Tooting, London SW17
Tel: 081-767 7129

For Wedding Parties
Disco Events
Birthdays & All other Social Events

7 Days a Week

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பெங்களூரில் கலவரம்

# 30 தமிழர்கள் படுகொலை

(இந்தியா)

கடந்த சில தினங்களாக பெங்களூரில் பலத்த கலவரம் மூண்டுள்ளது.நீண்ட காலமாக வாழ்ந்துவரும் தமிழ்நாட்டு தமிழர்களுக்கும் கன்னடம் மொழியாக பேசும் கர்நாடக மக்களுக்கும் இடையில் என்றுமில்லாதவாறு இனக்கலவரம் மூண்டுள்ளது. ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும் அதே நேரம் தமிழர்கள் மீதான தாக்குதல்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. கர்நாடக அரசு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதிலும் இன்னும் கலவரம் ஓயவில்லை.

இது வரையில் 30 தமிழர்கள் அடித்தோ அன்றி வெட்டியோ கொல்லப்பட்டுள்ளனர். 60 ற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். சிறுவர்கள், வயோதிபர், பெண்கள் உட்பட காயமுற்றிருக்கும் இவர்கள் தமிழ் நாட்டிலுள்ள ஒரு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த இரண்டு இனங்களுக்குமிடையில் காலாகாலமாக சிறு சிறு மோதல்கள் ஏற்பட்டு வந்தமை தெரிந்ததே. இருப்பினும் இது போன்ற கலவரம் என்றும் உருவாகியதில்லை என்கிறார் கர்நாடக முதலமைச்சர்.

பெங்களூரில் நீண்ட காலமாக வாழ்ந்துவரும் தமிழர்கள், தங்கள் நிலத்தை சூறையாடிவிட்டார்கள் என்ற ஒரு மனப்போக்குடையவர்கள் கர்நாடக மக்கள். இந்த மனவிரிசலே தமிழர்கள் மீதான தாக்குதலுக்குக் காரணமாக இருக்கலாம் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இது இவ்விதமிருக்க, தென்னிந்தியாவில் இருந்து கிடைக்கும் ஒரு செய்தியின்படி இந்த மோதலுக்கான காரணங்கள் வேறு விதமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. கர்நாடகத்தில் இருந்து தமிழ் நாட்டுக்கு திசை திருப்ப உள்ள காவிரி நீர் தொடர்பான பிரச்சனை இன்னும் இழுபட்டுக் கொண்டே இருக்கின்றது. ஜெயலலிதா தமிழ் நாட்டு முதலமைச்சராக வந்ததில் இருந்து காவிரி நீர் பிரச்சனையில் இவர் கூடிய அக்கறை காட்டி வந்தது யாவரும் அறிந்ததே. இதற்கு கர்நாடக அரசு குந்தகமாகவே செயற்பட்டு வந்தது. அண்மையில் தான் காங்கிரஸ் கட்சிக்கு கொடுக்கும் ஒத்துழைப்பை நிறுத்திவிடுவேன் என்றும் காவிரி நீர் தொடர்பான பிரச்சனையில் உடனடியாகத் தலையிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்ட ஜெயலலிதாவின் கோரிக்கையைத் தொடர்ந்து மத்திய அரசு இது தொடர்பாக கூடிய அக்கறை செலுத்தியது கர்நாடக அரசை ஆத்திர முற செய்ததாகவும் இந்த கலவரங்களின் பின்னணியில் கர்நாடக அரசு இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப் படுகிறது.

காவிரி நீர்ப் பிரச்சனையே இந்தக்கலவரத்துக்கு முக்கிய காரணம் என்று கூறும் இந்திய நாளேடான இந்து பத்திரிகை, தமிழர்கள் பெருவாரியாக தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறுகிறது.

## ஊரடங்கு உத்தரவு

### தற்காலிக தளர்வு

(ஆனந்தசங்கர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்கு உத்தரவை தளர்த்தியுள்ளது ஸ்ரீ லங்கா அரசு. சுமார் இரண்டு வார காலமாக அமுலில் இருந்த இந்த உத்தரவை தளர்த்தியுள்ள அரசு தேவை ஏற்பட்டால மீண்டும் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பிக்கும் என்றும் அறிவித்துள்ளது. ஊரடங்கு உத்தரவு தளர்வை அடுத்து தமக்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் ஈடுபட்டுள்ளனர் இப்பகுதி மக்கள்.

## மலையகப் பகுதிகளில்

# பலர் கைது

பயங்கரவாத இயக்கங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற போர்வையில் பல மலையக இளைஞர்களும் யுவதிகளும் கைதாகியுள்ளனர். எந்த வித காரணங்களும் காட்டப்படாது இப்பகுதி பொலீசாரினால் கைது செய்யப்படும் இவர்கள் எங்கே அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது இவர்களது உறவினர்களுக்கு அறிவிக்கப்படுவதில்லை.இரு தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட சுமார் 60 இளைஞர்களில் 6 பேர் பெண்கள்என்பது குறிப்பிடத் தக்கது

என்றும் இவர்களுக்கு நிவாரண உதவிகள் கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பின் செயலாளர் நாயகம் திரு சுரேஸ் பிரேமச் சந்திரன் பாதுகாப்பு எதுவுமற்ற நிலையில் முகாம்களில் தங்கியிருப்பது ஆபத்தானது என்று கருதியே மக்கள் தங்கள் உறவினர்களின் இல்லங்களில் வசிக்கிறார்கள் என்று கூறிய

## செல்வி ஜெயலலிதா

# பிரதமருக்கு அவசர தந்தி

(சென்னை)

கர்நாடக மாநிலத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் தமிழர்கள் மீதான வன்முறையை உடனடியாக நிறுத்த மத்திய அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும், இதனை முன்னிட்டு இராணுவத்தை உடனே அங்கு அனுப்பி வைக்கும் படியும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இந்தியப் பிரதமர் நரசிம்மராவ். அவர்களுக்கு தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.




## அமைச்சின் முடிவிற்கு கண்டனம்

# பிரேமச் சந்திரன் எம்.பி

(ஆனந்தசங்கர்)

அகதி முகாம்களில் இருப்பவர்களுக்கு மட்டுமே இனி வரும் காலங்களில் அகதிகள் நிவாரணம். முகாம்களில் இல்லாதோருக்கு வழங்கப்படமாட்டாது என்று புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது. இதுவரை காலமும் அகதிகள் என்று பதிவு செய்தோர் எங்கிருந்தாலும் அகதிகள் நிவாரண நிதி பெறத் தகுதியுடையவர்கள் என்று அறிவித்திருந்த போதிலும் புனர்வாழ்வு அமைச்சினால் இரு தினங்களுக்கு முன் விடப்பட்ட செய்திகளின் படி இனிமேற் காலங்களில் முகாம்களில் இருக்கும் அகதிகள் மட்டுமே அகதிகள் நிவாரண நிதியைப் பெற முடியும் என்று அறிவித்துள்ளது. அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்திருக்கும் மக்கள் அங்கு நன்கு கவனிக்கப்படுவதில்லை எனவும், அவர்களுக்குரிய மருத்துவ இருப்பிட வசதிகள் நல்ல முறையில் செய்து கொடுக்கப் படாமையே இவர்கள் முகாம்கள் அல்லாத இடங்களில் இருக்கின்றார்கள்

## செய்திச் சுருக்கம்



பிரேமச்சந்திரன்

பிரேமச்சந்திரன் அமைச்சின் இந்த அறிவிப்பை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில்
இருந்து ஈழபூமிக்கு
நிருபர்கள்
தேவைப்படுகின்றனர்.
எமது முகவரியுடன்
தொடர்புகொள்ளவும்

## இரு முகாம்கள் மீது

# புலிகள் தாக்குதல்

மட்டக்களப்பு பகுதியில் இருக்கும் இரண்டு முக்கிய இராணுவ நிலைகள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். மரிக்காரம்பனை , மற்றும் இன்னொரு இராணுவ முகாம் மீதும் மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதல்களில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். புலிகள் தரப்புச் சேதங்கள் பற்றிய தகவல்கள் எமக்குக் கிடைக்கவில்லை. நத்தார், புது வருடத்தை முன்னிட்டு யுத்தநிறுத்த ஏற்பாடுகள் நடைபெறும் இவ்வேளை இந்தத் தாக்குதல்கள் யுத்த நிறுத்தத்தை அமுலாக்க எடுத்த முயற்சிகளை தோல்வியடையச் செய்யலாம் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# அஸ்ரப் வரவேற்பு

அண்மையில் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானினால் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான தீர்வுப் பிரேரணையை ஆதரிக்கும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப் வடக்கு கிழக்கு மாகாண

அஸ்ரப் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைவதை தான் வன்மையாக எதிர்ப்பதாக கூறியுள்ளார். இவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, தமிழ் மக்களின் பிரச்சனைக்கு ஜனநாயக முறையில் ஒரு சுமுகமான தீர்வு வருவததை நாம் வரவேற்கிறோம். ஆனால் அந்த தீர்வு வடக்கும் கிழக்கும் ஒன்றிணைவதாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று தான் கருதுவதாக தெரிவித்துள்ளார்.

# விடுதலைப்புலிகள்

## தயார் நிலையில்

### கொழும்புவரும் பயணிகள் தகவல்

கரையோரப் பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ லங்கா இராணுவம் எந்த நேரமும் யாழ் குடாநாட்டைக் கைப்பற்ற முயலலாம் என் று நம்பப்படுகிறது. இராணுவம் குடாநாட்டுக்குள் முன்னேறுவதைத் தடுக்க விடுதலைப்புலிகள் இருபத்திநாலு மணி நேரமும் தயார் நிலையிலர்கள் அங்கிருந்து கொழும்பு வரும் மக்கள். புதுவித நவீன ரக ஆயுதங்கள் சகிதம் குடாநாட்டுக்குள் உலா வரும் விடுதலைப் புலிகள் அரச படைகளின் எந்தத் தாக்குதலையும் முறியடிக்கும் நோக்கோடு செயற்பட்டு வருகிறார்கள் என்று இவர்கள் மேலும் கூறினர்.

Global Printers

164A, (Rear) Mitcham Road,
Tooting,
London SW17 9NJ.
Tel: 081-767 8895

We Undertake the following work at reasonable rates:

PRINTING - SINGLE AND MULTI COLOUR
TAMIL & ENGLISH

Letter Heads, Business Cards,
Compliment Slips, Invoices.
Wedding Cards, Invitation Cards.
Leaflets, Posters, Tickets.

Global Printers

For prompt service at reasonable rates
call us on 081-767 8895

OPEN SEVEN DAYS A WEEK
FROM 10.00a.m. to 5.00p.m.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்